*Tamilmanam – International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Monthly
10.63300/tm12052026.19 தொகுதி 12, எண் 05 (2026) 12 05 2026 p254–270 TIRJTS-2026-0020

RESEARCH ARTICLE

# இருமை எதிர்வு நோக்கில் குறுந்தொகை உடன்போக்குப் பாடல்கள்

*Kurunthokai elopement poems from a dual opposition perspective*

*Binary Oppositions in the Udanpokku (Elopement) Poems of Kuruntokai*

**மு.ராஜா[1,*], முனைவர் ப.குமார்[2]**
[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.
[2] நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.
***தொடர்பு ஆசிரியர்:** மு.ராஜா, rajayazh18@gmail.com

ARTICLE INFO

**Article history**
Received: 1 October 2026
Revised: 4 October 2026
Accepted: 8 October 2026
Published: 1 October 2026

**Article ID**
TIRJTS-2026-0020

**Peer review**
Double-blind peer review

**Keywords**
குறுந்தொகை
உடன்போக்குப் பாடல்கள்
அமைப்பியல்
இருமை எதிர்வுகள்

ABSTRACT

"அமைப்பியல் ஆய்வின் (structural analysis) ஒரு பகுதியாக விளங்கும் இருமை எதிர்வுகள் (binary oppositions), செய்யுள்களில் காணப்படும் சூழல்களையும் கருப்பொருள்களையும் வேறுபடுத்தி அறிய உதவுகின்றன; இதன் மூலம், செய்யுளின் பொருண்மைத் தளத்தைப் (semantic dimension) புரிந்துகொள்ளத் துணைபுரிகின்றன. இதன் அடிப்படையில், இக்கட்டுரையானது சங்க இலக்கிய நூலான குறுந்தொகையில் காணப்படும் பல்வேறு திணைப் பாடல்களுள் ஒன்றான உடன்போக்கு (elopement) தொடர்பான பாடல்களில் இடம்பெற்றுள்ள இருமை எதிர்வுகளை ஆராய்கிறது. இதனை ஆராய்வதன் மூலம், குறிப்பிட்ட திணைப் பாடல்களுக்குள் இருமைகளின் அமைப்பையும், அவை பயன்படுத்தப்பட்டுள்ள முறைகளையும் அடையாளம் கண்டு வெளிப்படுத்த முடியும்."

***Abstract***

Binary oppositions, as a part of structural analysis, help distinguish contexts and themes found in poems, thereby assisting in understanding the semantic dimension of the poem. Based on this, the present article investigates binary oppositions in poems related to udanpoku (elopement), one of the various thematic poems found in the Sangam literature text Kuruntokai. By examining this, the structure of binaries and the patterns in which they are employed within specific thematic poems can be identified and revealed.

**How to cite this article:** மு.ராஜா, & முனைவர் ப.குமார் (2026). இருமை எதிர்வு நோக்கில் குறுந்தொகை உடன்போக்குப் பாடல்கள். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(05), 244–254. https://doi.org/10.63300/tm12052026.19
**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons

Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

இருமை எதிர்வு என்பது அமைப்பியல் ஆய்வின் ஒரு பகுதியாகும். ஒன்றுக்கொன்று முரணுள்ள இரண்டு பொருள்கள் உண்டு என்பது இருமை கொள்கை. “இருமை எதிர்வு என்பது ‘கல்’ என்ற சொல்லைப் ‘பல்’ என்ற அதே அளவு கொண்ட இன்னொரு சப்தத்தோடு ஒப்பீடு செய்கையில் கிடைக்கும் வித்தியாசம் மூலம் அர்த்தம் உருவாகிறது என்ற சித்தாந்தம் இது” என்று தமிழவன் தன்னுடைய பழந்தமிழில் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் (ப.49) என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

மனிதர்கள் தங்களைச் சுற்றி நடப்பவைகளையும், உள்ளவைகளையும் இருமை எதிர்வு அடிப்படையில் பகுக்கும் மனம் கொண்டவர்கள். எடுத்துக்காட்டாக, நன்மை x தீமை, இருள் x வெளிச்சம், சொர்க்கம் x நரகம், இரவு x பகல் போன்றவற்றைக் கூறமுடியும். இவ்வாறான இருமைகள் அவர்கள் பேசும் மொழியிலும், மொழியின் வாயிலாக இலக்கியங்களிலும் மற்றும் பண்பாடுகளிலும் வெளிப்பட்டு நிற்கும். எடுத்துக்காட்டாக நம்முடைய சங்க இலக்கியங்களை நோக்கும் போது இவற்றை அறியமுடியும். அவை, அகம் x புறம், களவு x கற்பு என்ற இருமை எதிர்வு முறைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இருமை எதிர்வு என்பது அமைப்பியல் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்க கோட்பாட்டு மரபாகும். இக்கோட்பாட்டினை இணை முரண்கள் என்று க. பஞ்சாங்கமும், இருநிலை எதிர்வு என்று தி.சு. நடராசனும், துருவ முரண்பாடுகள் என்று எச்.பாலசுப்பிரமணியனும் குறிப்பிடுகின்றனர் (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் ப.168).

இந்த இருமை எதிர்வுகள் பாடல்களின் சூழல்கள் மற்றும் பொருண்மைகளைப் வேறுபடுத்திக்காட்டி அவற்றிலிருந்து பாடலின் அர்த்தத் தளத்தினைப் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றன. இதனடிப்படையில் குறுந்தொகையில் உள்ள உடன்போக்குத் தொடர்பான பாடல்களில் காணப்படும் இருமை எதிர்வுகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது. இவ்வாறு ஆராய்வதன் மூலம் குறிப்பிட்ட பொருண்மை சார்ந்த பாடல்களில் இருமைகளின் அமைப்பினையும், அவை, பயின்று வந்துள்ள முறைமையினையும் கண்டறிந்து வெளிப்படுத்த முடியும்.

**குறுந்தொகை உடன்போக்குப் பாடல்கள்**

குறுந்தொகையில் காணப்படும் பல்வேறு பொருண்மை சார்ந்த பாடல்களில் உடன்போக்கு சார்ந்த பாடல்களும் அடங்கும். “அகத்திணையில் களவு வாழ்க்கை கற்பாக மாறுவதற்கு அறத்தொடு நிற்றல், உடன்போக்கு என்ற இரண்டு முறைகள் உள்ளன. இதில் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது” (Tamilvu.org).

இதில் உடன்போக்கு என்பது தலைமக்கள் வீட்டை விட்டு வெளியேறுவது அதாவது, தலைவன் தலைவியை தன்னுடன் அழைத்துச் செல்லுதல் ஆகும்.

உடன்போக்கும் வரைவும் தோன்றுவதற்கான காரணங்களாக, தொல்காப்பிய பொருளியல் 31வது நூற்பா குறிப்பிடுகின்றது. அந்நூற்பா, “மனைக்கிழத்தியாகி இல்லறம் நிகழ்த்துதலை உறுதியாக விரும்புதலானும் ஆள்வினை காரணமாகப் பிரிதல் தலைவற்குத் கடனாதலின் தலைவன் பிரிதலை அஞ்சுதல் மகளிர்க்கு உளதாகலானும் களவொழுக்கத்தினைப்

புறத்தார்க்குப் புலப்படுத்தும் என்று அஞ்சும்படியாக வந்த அம்பலும் அலரும் ஆகிய இரு நிலைமகளானும் செவிலி முதலானோர் தன்னை ஐயுற்று நோக்கும் நோக்கொடு தோன்றிய தலைவனது கூட்டத்திற்கு இடையூறாகிய பொருள்களானும், இற்செறிக்கப்பெற்று மனையிடத் தாளாகிய தலைவியின்பால் தலைவனொடு உடன்போதலைக் கருதுதலும் ஆண்டு வரைந்து கோடலைக் கருதுதலும் முனைந்து தோன்றும் (தொல்.பொருள். தொகுதி 3, பகுதி 2, ப. 198)" என்றது.

இந்த உடன்போக்கு என்ற நிகழ்வானது தலைவன் மற்றும் தலைவியின் களவு வாழ்க்கை வெளிப்பட்டு ஊரார் அலர் பேசத் தொடங்கும் நிலையிலும், தலைவியின் இல்லத்தில் கடுமையான காவலால் தலைவனைச் சந்திக்க முடியாத சூழலிலும் நிகழ்கின்றது. இதனைத் தொல்காப்பியர் <u>கொண்டுதலைக்</u> கழிதல் என்று குறிப்பிடுகின்றார் (தொல்.பொருள்.அகம்.<u>நூ</u>.17). பிற்கால நூற்கள் உடன்போக்கு என்று குறிப்பிடுகின்றன.

பிற்கால இலக்கண நூலான அகப்பொருள் விளக்கம் உடன்போக்கு மற்றும் அதனைச் சார்ந்த நிகழ்வுகளாக எட்டு வகைகளைக் குறிப்பிடுகின்றது. அவை, போக்கு அறிவுறுத்தல், போக்கு உடன்படாமை, போக்கு உடன்படுத்தல், போக்கு உடன்படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் ஆகியவை ஆகும் (அகப்பொருள் விளக்கம். நூ. 181). மேலும் 182வது நூற்பாவில் பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தலும் முதலாகத் தலைவன் தன் பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தலும் முடிவாகப் பதினெட்டும் உடன்போக்கின் <u>விரியாக</u> அகப்பொருள் விளக்கம் குறிப்பிடுகின்றது.

குறுந்தொகையில் உடன்போக்குடன் தொடர்புடைய பாடல்களாகப் பத்தொன்பது பாடல்கள் இடம்பெறுகின்றன. அவை, 7, 15, 44, 84, 115, 144, 149, 217, 229, 262, 297, 343, 356, 369, 378, 383, 388, 390, 396 ஆகிய பாடல்கள் ஆகும். இவற்றில் 115, 217, 297 ஆகிய மூன்று பாடல்கள் குறிஞ்சி சார்ந்த பாடல்களாகவும், மற்ற அனைத்து பாடல்களும் பாலைத்திணை பாடல்களாகவும் அமைந்துள்ளன என்பதை மு.சண்முகம்பிள்ளை அவர்களின் குறுந்தொகை உரையின் வழி அறிந்துக்கொள்ள முடிகின்றது.

தொல்காப்பியத்தின் அடிப்படையில் **நற்றாய்** (தொல்.பொருள்.அகம்.நூ.38), **தோழி** (தொல்.பொருள்.அகம்.நூ.41), **கண்டோர்** (தொல்.பொருள்.அகம்.நூ.42, தொல்.பொருள்.செய்.நூ.192), **தலைவன்** (தொல்.பொருள்.அகம்.நூ.43, தொல். பொருள். செய்.நூ.193), **தலைவி** (தொல்.பொருள்.களவு.நூ.17), **செவிலி** (தொல்.பொருள்.களவு.நூ.25) ஆகியோர் உடன்போக்குத் தொடர்பான இடங்களில் கூற்று நிகழ்த்துகின்றனர்.

நாற்றாய் கூற்று குறித்து கூறும் அகத்திணையியல் நூற்பாவானது (நூ.38) செவிலிக்கும் உரியது என்று கூறி, அதற்குச் சான்றாக "ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின் தாயெனப் படுவோள் செவிலியாகும்" என்ற களவியல் (நூ.34) நூற்பாவை மேற்கோளாகக் காட்டுகின்றார் உரையாசிரியர் பாவலரேறு ச. பாலசுந்தரம் (தொல்.பொருள்.தொகுதி 3, பகுதி 1, ப.64).

செவிலி கூற்று குறித்து கூறும் களவியல் நூற்பாவானது நற்றாய்க்கும் உரியது என்று அதற்கு அடுத்த நூற்பாவான "தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே" என்ற களவியல் (நூ.26) நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

இதனடிப்படையில் குறுந்தொகை உடன்போக்கு தொடர்பான பாடல்களை அணுகும் போது நால்வரின் கூற்றுகள் இடம்பெறுகின்றன. கண்டோர் கூற்றாக மூன்று (7, 229, 390) பாடல்களும், செவிலிக் கூற்றாக ஏழு (15, 44, 84, 144, 356, 378, 396) பாடல்களும், தோழிக் கூற்றாக எட்டு (115, 217, 297, 343, 369, 383, 388, 262) பாடல்களும், தலைவிக் கூற்றாக ஒரு (149) பாடலும் அமைந்துள்ளன.

இப்பாடல்கள் அனைத்தினையும் கூற்று நிகழும் காலம் அல்லது இடத்தின் அடிப்படையில் உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்கள், உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்கள் என்று இரண்டு வகையான உள்ளடக்கங்களாகப் பகுக்க முடியும். மேற்கூறிய இரண்டு பகுப்பிற்குள்ளும் இடம்பெறும் பாடல்களின் பொருண்மை அடிப்படையிலும் வெவ்வேறு உள் உள்ளடக்கங்கள் காணப்படுகின்றது. உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்கள் என்னும் இப்பகுப்பில் 115, 217, 262, 297, 343, 369, 383, 388, 149 ஆகிய ஒன்பது பாடல்களும், உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்கள் என்னும் பகுப்பில் 7, 15, 44, 84, 144, 229, 356, 378, 390, 396 ஆகிய 10 பாடல்கள் இடம்பெறுகின்றன. (உள்ளடக்கவியல் நோக்கில் குறுந்தொகை உடன்போக்குப் பாடல்கள், நவீனத் தமிழாய்வு, தொகுதி – 13, எண்.4, ப.172,).

**இருமை எதிர்வு கோட்பாடு**

இருமை என்பதற்கு கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி “இரண்டாகப் பிரிக்கப்பட்டது” என்று பொருள் கூறுகிறது (ப.144). அதாவது ஒன்றுக்கொன்று முரணுள்ள இரண்டு பொருள்கள் உண்டு என்பது இருமை கொள்கையாகும். “மனித மனத்தின் செயல்பாடு இரட்டையானது என்பது ஃப்ரெஞ்சு அமைப்பியலாளரின் கருத்து. மனச்செயல்பாடு, அதாவது சிந்தனை இரட்டையானது என்பதால் மனிதன் தன்னுடைய உலகத்தை இரட்டை அடிப்படையிலேயே நோக்கி, அதனை ஒழுங்குபடுத்துகிறான்” (நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள் ப.301). எடுத்துக்காட்டாகத், தமிழ் இலக்கியச் சூழலில் அகம் x புறம், களவு x கற்பு, போன்ற இருமை எதிர்வுகளைச் சுட்டிக்காட்ட முடியும். தொல்காப்பியக் களவியல் 94வது நூற்பா அகமாந்தர்களின் ஒழுக்கத்தை இருமை எதிர்வுகளின் அடிப்படையில் விளக்குகின்றது.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி யுயர்ந்த பால தாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

மிக்கோ னாயினும் கடிவரை யின்றே

(தொல்.பொருள்.களவு.நூ.94)

அகஒழுக்கமாகிய ஐந்திணை நிகழ்ச்சிகள் யாவும் கூடியிருத்தல் பிரிந்திருத்தல் என்னும் இருவகையாயே நிகழ்தலின் ஒன்றுபடுத்தல், வேறுபடுத்தல் என்ப பாலும் (ஊழ்வினை) இருவகையாயிற்று. அகனைந்திணையாகிய ஒழுக்கத்தை மேற்கொள்ளும் தலைமக்கள் அவ் இருவகை (புணர்த்தல் – பிரிதல்) ஊழின்பாற்பட்டு இயங்கதலான் இருபால்வயின் ஒன்றி என்றார் என்று உரையாசிரியர் பாவலரேறு ச. பாலசுந்தரம் தன்னுடைய உரையில் குறிப்பிடுகின்றார் (தொல்.தொகுதி-3, பகுதி -2, ப.7). இதன் மூலம் ஐந்திணை நிகழ்ச்சிகள் யாவும் புணர்த்தல் x பிரிதல் என்ற இருமை எதிர்வு அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

தொல்காப்பியம் அகத்திணையினைக் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்று ஏழாகவும், அந்த ஏழிற்கும் புறமாக நிகழும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய புறத்திணையினை ஏழாகவும் இருமை எதிர்வு அடிப்படையில் கூறுகிறது.

முற்பொருளில் ஒன்றான பொழுதானது சிறு பொழுது x பெரும் பொழுது என்று இருமையாகப் பகுத்து சிறு பொழுது ஆறாகவும், பெரும் பொழுது ஆறாகவும் பகுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நம்முடைய இலக்கண, இலக்கியங்கள் பல்வேறு நிலைகளில் இருமை எதிர்வுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

“நம்முடைய இலக்கியப் பனுவல்கள், தொலைக்காட்சித் தொடர், திரைப்படம், கலை, இலக்கியச் செயல்பாடுகளிலும் இந்த இணைமுரன்கள் கதையை உந்திச் செலுத்துகிற பணியைச் செய்து கொண்டிருக்கின்றன” என்று கா. பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றார் (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் ப.169). இதற்கு உதாரணமாக, கம்பராமாயணத்தைக் காட்டும் அவர், இராமன் x இராவணன், மனிதன் x அரக்கன், சீதையைத் தவிரப் பிற மகளிரை எண்ணத்தாலும் தொடாதவன் x பிற மகளிரை நாடி அலைகிறவன், நன்மையின் பக்கம் நிற்பவன் x தீமையின் பக்கம் நிற்பவன் – முதலிய முரண்கள் அமைந்துதான் இதிகாசத்தை இலக்கியப் பனுவலாக வளர்த்தெடுக்கின்றன என்கிறார் (மேலது ப.169)

அமைப்பியல் அறிஞரான லெவி ஸ்ட்ராஸ் “எல்லாவித அடையாளங்களுக்கும் உள்ளே, சற்று மேல்தோலை நீக்கிப் பார்த்தால் நமக்குத் தெரியாத விதமாய் ஒளிந்துகொண்டு ஒரு இருமை எதிர்வுப் பண்பு உண்டு” என்ற கருத்தாக்கட்தை முன்வைக்கிறார் (பழந்தமிழில் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் ப.28).

இதனடிப்படையில் அமைப்பியல் அறிஞரான லெவி ஸ்ட்ராஸின் இருமை எதிர்வு என்ற அமைப்பியல் கோட்பாட்டின் அடிப்படையில் குறுந்தொகை உடன்போக்குப் பாடல்களை உள்ளடக்கங்கள் மற்றும் கூற்றுகள் வழி ஆராயப்படுகிறது. மேலும், இப்பாடல்களில் இடம்பெற்ற இருமைகளைக் கண்டறிய முனைவர் குளோரியா சுந்தரமதி சங்க இலக்கியப் பாடல்களின் அமைப்பினைக் கண்டறிய பயன்படுத்திய பகுப்பாய்வு முறையியல் பயன்படுத்தப்படுகின்றன.

**உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்களும் இருமைகளும்**

உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்கள் என்பது தலைவனும் தலைவியும் உடன்போக்கு செல்வதற்கு முன்பு அது குறித்த பொருண்மையில் இயற்றப்பட்ட பாடல்களாகும். தலைவனும் தலைவியும் உடன்போக்கு செல்வதற்கு முன்பாக உடன்போக்கு உணர்த்துதல், மறுத்தல் போன்ற நிலைகளில் தோழி, தலைவி போன்றோரின் கூற்றுகள் நிகழும். அதனடிப்படையில் அப்பாடல்கள் அனைத்தும் உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான களன்களை உள்ளடக்கங்களைக் கொண்ட பாடல்கள் என்ற பகுப்பிற்குள் கொண்டு வரப்படுகின்றன.

பிற்கால இலக்கண நூலான அகப்பொருள் விளக்கம் உடன்போக்கு மற்றும் அதனைச் சார்ந்த நிகழ்வுகளாகக் குறிப்பிடும் எட்டு வகைகளில் போக்கு அறிவுறுத்தல், போக்கு உடன்படாமை,

போக்கு உடன்படுத்தல், போக்கு உடன்படுதல் ஆகியவற்றை உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான என்னும் பொருண்மைகளில் அமைந்தவை ஆகும்.

உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்கள் என்னும் இப்பகுப்பில் ஒன்பது பாடல்கள் இடம்பெறுகின்றன. இப்பாடல்கள் அனைத்தும் காலத்தின் அடிப்படையில் ஒரே உள்ளடக்கங்களைக் கொண்டிருந்தாலும், இவற்றுக்குள்ளும் உடன்போக்கின் வேறுபட்ட பொருண்மைகள் காணப்படுகின்றன.

சில பாடல்கள் உடன்போக்கை உணர்த்தல் தொடர்பான பாடல்களாகவும் (262, 343, 369, 217, 297), சில பாடல்கள் மறுத்தல் (149) தன்மையுடனும், சில பாடல்கள் மறுத்தலுக்குப் பதிலுரைத்தல் (383, 388) என்ற தன்மையிலும், சில பாடல்கள் உடன்போக்கை ஏற்றல் (115) என்ற தன்மையிலும் அமைந்துள்ளன. உடன்போக்கை உணர்த்தல் தொடர்பான பாடலை மேலும் பகுப்பிற்கு உட்படுத்தும் போது அப்பாடல்களுக்குள்ளே மறைமுகமாக உணர்த்தல் (262), நேரடியாக உணர்த்தல் (343, 369, 217, 297) என்று மேலும் இரண்டு விதமான போக்கைக் காணமுடிகின்றது. (உள்ளடக்கவியல் நோக்கில் குறுந்தொகை உடன்போக்குப் பாடல்கள், நவீனத் தமிழாய்வு, தொகுதி – 13, எண்.4, ப.172,).

மேலும், இப்பாடல்களில் தலைவிக்கூற்றில் அமைந்த உடன்போக்கை மறுத்தல் தொடர்பான 149வது பாடல் தவிர்த்து மற்ற பாடல்கள் அனைத்தும் தோழிக்கூற்றில் அமைந்த உள்ளடக்கங்களாகும்.

உடன்போக்குத் தொடர்பான பொருண்மைகளில் தலைவிக் கூற்று நிகழும் இடங்கள் தொல்காப்பிய களவியல் நூற்பாவில் “நாணு நெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும் (17)” என்று கூறுகின்றது. அதாவது, பெண்மைக் குண்மாகிய நாணுடைமை தனது நெஞ்சினை அசைத்தலான் அதனைக் கைவிடுதலைக் கருதியவிடத்தும் தலைவிக்கூற்று நிகழும் என்கிறது. தலைவிக்கூற்றாக அமைந்த 149வது பாடலும் நாணம் அழியும் என்று கருத்தியே உடன்போக்கை மறுத்தல் தன்மையில் அமைந்துள்ளது.

உடன்போக்குத் தொடர்பான தோழிக்கூற்று நிகழும் இடங்கள் தொல்காப்பிய அகத்திணையில் 41வது நூற்பாவில் இடம்பெற்றுள்ளன. இந்நூற்பா குறிப்பிடும் ஆறு நிலைகளில் தலைவரு விழுமநிலை, போக்கற்கண்ணும், நீக்கலின் வந்த தம்முறு விழுமமும், வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப் பெயர்த்துக் கொளினும் என்ற நான்கு நிலைகளில் தோழிக்கூற்று உடன்போக்குத் தொடர்பாக நிகழும் என்கிறது.

**தோழிக்கூற்றில் இடம்பெறும் இருமை எதிர்வுகள்**

குறுந்தொகை உடன்போக்கு பாடல்களில் தோழிக்கூற்றாக எட்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களை ஆராய்ந்ததில் 217, 383 ஆகிய இரண்டு பாடல்களில் இருமை எதிர்வுகள் என்ற அமைப்பு பயின்று வந்துள்ளது. எடுத்துக்காட்டு, தோழி தலைவனிடம் கூற்று நிகழ்த்தும் மரபில் அமைந்த பாடலான 217வது பாடலைக் காணலாம்.

தினைகிளி கடிகெனிற் பகலு மொல்லும்

இரவுநீ வருதலி னூறு மஞ்சுவல் (குறு. 217)

தினையின்கண் படியும்கிளிகளை ஓட்டுவீர்களாக என்று கூறி எம் தாய் எம்மைப்போதரவிடின், பகற்காலம் நின்னோடு அளவளாவுதற்குப் பொருந்தும், அங்ஙனம் இன்மையின், இராக் காலத்து நீ வருதலினால் வழியின்கண் நேரும் துன்பங்களுக்கு அஞ்சுவேன் என்பது இவ்வரிகளின் பொருளாகும். இதில் பகல் காலம் தலைவனோடு சந்திப்பதற்குப் பாதுகாப்பானது என்றும், இரவு காலம் என்பது பாதுகாப்பானது இல்லை என்றும் பொருள்பட பகல் X இரவு என்பது ஒல்லும் X ஊறு அஞ்சுவல் என்ற இருமை எதிர்வு அடிப்படையில் அமைந்துள்ளது.

மற்றொரு பாடலான 383வது பாடல் தோழி தலைவியிடம் கூற்று நிகழ்த்தும் மரபில் அமைந்த பாடலாகும்.

நீயுடம் படுதலின் யான்றர வந்து

குறிநின் றன்னே குன்ற நாடன்

இன்றை யளவே சென்றைக் கென்றி (குறு.383)

நீ உடன்போக இயைந்தனையால், நான் கூற தலைவன் குறியிடத்தே வந்து நின்றான். நீயோ, இன்றையாகிய பொழுது கழிக என்று கூறினாய் என்பது இவ்வரியின் பொருளாகும். இதில் முதலில் உடன்போக்கு செல்வதற்கு உடன்பட்ட தலைவி பிறகு இன்றைய பொழுது கழிக என்று கூறுவதன் மூலம் பிறகு உடன்படாமை குறிப்பிடப்படுகின்றது. இதன்மூலம் உடன்படல் X உடன்படாமை என்ற இருமை எதிர்வு வெளிப்படுகின்றது.

இப்பகுதியில் இரண்டு விதமான கூற்றுகள் இடம்பெற்றிருப்பினும் தோழிக்கூற்றில் மட்டுமே இருமை எதிர்வு இடம்பெற்றுள்ளது. தலைவிக்கூற்றில் இருமை எதிர்வு என்ற அமைப்பு இடம்பெறவில்லை.

**உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்களும் இருமைகளும்**

உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்கள் என்பது தலைவனும் தலைவியும் உடன்போக்கு நேர்ந்த பிறகு நிகழும் பொருண்மைகளால் அமைந்த பாடல்களாகும். தலைவனும் தலைவியும் உடன்போக்கு சென்ற பிறகு அவர்களைக் வழியில் காணுபவர்கள் அவர்களின் நிலைக்குறித்து இரங்குதல் மற்றும் தலைவியின் நிலைக் குறித்து வருந்துதல் போன்ற நிலைகளில் கண்டோர், செவிலி போன்றோரின் கூற்றுகள் நிகழும். அதனடிப்படையில் அப்பாடல்கள் அனைத்தும் உடன்போக்கு நிகழ்ந்த பிறகான களன்களை உள்ளடக்கங்களைக் கொண்ட பாடல்கள் என்ற பகுப்பிற்குள் கொண்டு வரப்படுகின்றன.

பிற்கால இலக்கண நூலான அகப்பொருள் விளக்கம் உடன்போக்கு மற்றும் அதனைச் சார்ந்த நிகழ்வுகளாகக் குறிப்பிடும் எட்டு வகைகளில் போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் ஆகியவையும், அகப்பொருள் விளக்கம் (நூ.183) குறிப்பிடும் கற்போடு புணர்ந்த கவ்வையின் வகைகளான செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், கவர்மனை மருட்சி, கண்டோர் இரக்கம், செவிலி பின்தேடிச் சேறல் ஆகியவையும் உடன்போக்கு நிகழ்ந்த பிறகான என்னும் பொருண்மைகளில் அமைந்தவை ஆகும்.

உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்களை (7, 15, 44, 84, 144, 229, 356, 378, 390, 396) மேலும் பகுப்பிற்கு உட்படுத்தும் போது கூற்று நிகழும் இடத்தின் அடிப்படையில் பாலையில்

நிகழக்கூடியது (7, 44, 229, 390), இல்லத்தில் நிகழக்கூடியது (15, 84, 144, 356, 378, 396) என்று இரண்டு விதமாகப் பகுக்கலாம். பாலையில் நிகழக்கூடிய பாடல்கள் கண்டோர் கூற்றாகவும், இல்லத்தில் நிகழக்கூடிய பாடல்கள் செவிலிக்கூற்றாகவும் அமைந்துள்ளன.

தொல்காப்பிய அகத்திணை மற்றும் செய்யுளியல் நூற்பாக்கள் கண்டோர் கூற்றுக் குறித்து கூறுகின்றது.

ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு

கண்டோர் மொழிதல் கண்ட தென்ப (தொல்.பொருள்.செய்.நூ.192)

என்ற தொல்காப்பிய செய்யுளியல் நூற்பா ஆயத்தார், செவிலி, நற்றாய், தலைவன், தலைவி, ஆகிய இவர்களோடு கண்டோர் மொழிதல் இலக்கியத்துட் கண்ட மரபு என்க கூறுவர் புலவர். இதில் கண்டோர் என்பது தலைவனும், தலைவியும் உடன்போக்கின்கன் இடைச்சுரத்துக் கண்டோரை. அதனால், அஃது காரணப்பெயராயிற்று என்கிறார் பாவலரேறு ச. பாலசுந்தரம் (தொல். பொருள். தொகுதி-3, பகுதி-3, ப.140).

அகத்திணையில் 42வது நூற்பா கண்டோர் கூற்று குறித்து ஆறு நிலைகளைக் குறிப்பிடுகின்றது. அவை, பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றங்காட்டலும், ஊரது சார்வும் செல்லுந்தேயமும் ஆர்வநெஞ்சமொடு செப்பிய வழியினும், புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்தெதிர்கூறி விடுப்பினும், ஆங்கு அத் தாய்நிலை கண்டு தடுப்பினும், விடுப்பினும், சேய்நிலைக்ககன்றோர் செலவினும் வரவினும் என்பது கண்டோர் கூற்று நிகழ்த்தும் நிலைகள் ஆகும். இவை அனைத்தும் உடன்போக்கு நிகழ்ந்த பிறகு நிகழும் கூற்றுகளாக அமைந்துள்ளன.

செவிலிக்கூற்று குறித்து தொல்காப்பிய களவியல் 25வது நூற்பா 13 நிலைகளைக் குறிப்பிடுகின்றது. அவற்றுள், போக்குடன் கழிந்தபின் தோழியொடு கெழீஇக் கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும், பிரிவின் எச்சத்தும், மகள் நெஞ்சுவலிப்பினும், இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும் ஆகிய நான்கு நிலைகளில் உடன்போக்குத் தொடர்பாக செவிலிக்கூற்று நிகழும். இது நற்றாய்க்கும் உரியதாகும் என்று அதற்கு அடுத்த நூற்பா குறிப்பிடுகின்றது (தொல்.பொருள்,களவு.நூ.26).

அதேபோல், தொல்காப்பிய அகத்திணையியல் 38வது நூற்பா நற்றாய்க்கு உரிய கூற்றுகளைக் குறிப்பிடுகின்றது. அவை செவிலிக்கும் உரியது என்பது மேற்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. அந்நூற்பாவில், “வழக்காற்றின்கண் நிலைபெறும் புள்ளு முதலாகிய நிமித்தமும் விரிச்சியாக நிகழும் மொழிப்பொருளும் தெய்வமும் சென்ற சுரத்தின்கண் நேரும் நன்மையும் தீமையும் அச்சமும் சார்பும் அவை போல்வன பிறவுமாயவற்றை அவற்றொடு கூட்டித் தான் தனித்து வருந்தலும், உயிரோரன்ன நட்பினளாகிய தோழியிடத்தும் தான் தேடிச் செல்லுங்கால் எதிர்வரக்கண்டோர் பக்கத்தும் உடன்போக்கு நேர்ந்த இருவகை வேனிலும் பின்பனியுமாகிய காலம் மூன்றனது நிலையொடு விளக்கி நிகழ்த்துவனவாகிய கிளவிகளும் அவட்கு உரியவாகும் (தொல்.பொருள். தொகுதி 3, பகுதி 1. ப.64)” என்கிறது.

**கண்டோர் கூற்றில் இடம்பெறும் இருமை எதிர்வுகள்**

குறுந்தொகை உடன்போக்கு பாடல்களில் கண்டோர் கூற்றாக 7, 229, 390 ஆகிய மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் 7, 229 ஆகிய இரண்டு பாடல்களில் இருமை எதிர்வு இடம்பெற்றுள்ளது.

7வது பாடலில் தலைவன் தலைவியின் வருணனைத் தொடர்பான இருமையாகவும், 229வது பாடலில் தலைவன் தலைவியின் உறவுநிலையினைச் சுட்டும் இருமையாகவும் அமைந்துள்ளன.

**வருணனைத் தொடர்பான இருமைகள்**

உடன்போக்கு சென்ற தலைவன் மற்றும் தலைவியைக் கண்டோர் தம்முள் இரங்கி கூறும்படியான பொருண்மையைக் கொண்ட 7வது பாடலில் வருணனை தொடர்பான இருமைகள் இடம்பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டு

வில்லோன் காலன கழலே தொடியோள்

மெல்லடி மேலவுஞ் சிலம்பே... (குறு.7)

வில்லையுடையவனாகி இவ்வாடவனது காலில் உள்ளன வீரக்கழல்கள், தோள்வளையை அணிந்த இம்மகளினுடைய மெல்லிய அடியின்மேலுள்ளனவும் சிலம்புகள் என்பது இவ்வரிகளின் பொருளாகும்.

இப்பாடலில் வில்லோன் காலன கழலே X தொடியோள் மெல்லடி மேலவுஞ் சிலம்பே என்ற அமைப்பு முறையில், வில்லோன் X தொடியோள், கழலே X சிலம்பே என்று இருமை எதிர்வுகள் அமைந்துள்ளன. இதில் தலைவனுக்கு வீரத்தோடு தொடர்புடைய வில் மற்றும் கழலும், தலைவிக்கு அணிகலன்களோடு தொடர்புடைய தொடி (வளை) மற்றும் சிலம்பு ஆகியவை எதிர் எதிர் நிலையில் வைத்து வருணிக்கப்படுகின்றன.

**தலைவன் தலைவியின் உறவுநிலையினைச் சுட்டும் இருமைகள்**

229வது பாடலில் தலைவன் தலைவியினைக் கண்டோர் அவர்களது முந்தைய மற்றும் தற்போதைய உறவுநிலையினை இருமை எதிர்வு நிலையில் சுட்டுகின்றனர். அதாவது, தலைவன் தலைவியின் சிறுவயது உறவுநிலை X தலைவன் தலைவியின் தற்போதைய உறவுநிலை என்ற அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டு

இவனிவ ளைம்பால் பற்றவு மிவளிவன்

புன்றலை யோரி வாங்குநள் பரியவும்

காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிர

தேதில் சிறுசெரு வுறுப மன்னோ

நல்லைமன் றம்ம பாலே மெல்லியற்

றுணைமலர்ப் பிணைய லன்னவிவர்

மணமகி ழியற்கை காட்டி யோயே (குறு.229)

என்ற குறுந்தொகை 229வது பாடலுக்கு “இவன் இவளது கூந்தலைப் பிடித்து இழுக்கவும், இவள் இவனது புல்லிய தலைமயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடவும், அன்புடைய செவிலித்தாயார் இடைமறித்துத் தடுக்கவும், ஒழியாமல் அயன்மையையுடைய சிறிய சண்டையை முன்பு பொருந்துவார்கள்; இப்பொழுது மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப் போன்ற இவர்கள், மணம் புரிந்து மகிழும் இயல்பை உண்டாக்கினாய்; ஆதலின் ஊழ் வினையே, நீ நிச்சயமாக நன்மையை யுடையாய்” என்று உ.வே.சா. உரை எழுதியுள்ளார் (குறுந்தொகை மூலமும் உரையும் ப.434)

**முந்தைய உறவுநிலை**

இவன் இவளது கூந்தலைப் பிடித்து இழுக்கவும், இவள் இவனது புல்லிய தலைமயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடவும், அன்புடைய செவிலித்தாயர் இடைமறித்துத் தடுக்கவும், ஒழியாமல், அயன்மையையுடைய சிறிய சண்டையை முன்பு பொருந்துவார்கள்.

**பிந்தைய உறவுநிலை**

இப்பொழுது மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப் போன்ற இவர்கள், மணம் புரிந்து மகிழும் இயல்பை உண்டாக்கினாய்.

மேற்கண்ட பாடலானது சிறுவயதில் தலைவனும் தலைவியும் சிறு சிறு சண்டை செய்பவர்களாகவும், தற்போது மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப் போன்ற இவர்கள் மணம் புரிந்து மகிழும் இயல்பை உடையவர்கள் ஆனார்கள் என்று பாலையில் கண்டோர் தம்முள் கூறியதாக சுட்டப்படுகின்றது.

மேற்கண்ட இரண்டு பாடல்களும் உடன்போக்கு நிகழ்ந்த பிறகான உள்ளடக்கத்தில் பாலையில் நிகழக்கூடியது என்ற பகுப்பில் அமையக்கூடிய பாடல்களாகும்.

**செவிலிக்கூற்றில் அமைந்த இருமை எதிர்வுகள்**

குறுந்தொகை உடன்போக்குப் பாடல்களில் மகட் போக்கிய செவிலித்தாய் கூற்றுப் பாடல்களாக 15, 44, 84, 144, 356, 378, 396 ஆகிய ஏழு பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்களை ஆராய்ந்ததில் 15, 356, 378, 144, 396 ஆகிய ஐந்து பாடல்களில் ஆறு இருமை எதிர்வு அமைப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் 356வது பாடலில் மட்டும் இரண்டு வித இருமைகள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் உடன்போக்கு நிகழ்ந்த பிறகான உள்ளடக்கத்தில் இல்லத்தில் நிகழும் என்ற பகுப்பில் அடங்கும் பாடல்களாகும்

15, 378 ஆகிய பாடல்களில் தலைவன் தலைவி வருணனைத் தொடர்பான இருமைகளும், 144, 396 ஆகிய பாடல்களில் தலைவியின் நிலையினைச் சுட்டும் இருமைகளும், 356வது பாடலில் மேற்கூறிய இரண்டு இருமைகளும் இடம்பெற்றுள்ளன.

**வருணனைத் தொடர்பான இருமைகள்**

இல்லத்தில் நிகழக்கூடிய செவிலிக்கூற்று பாடல்களான 15, 356, 378வது பாடல்கள், பாலையில் நிகழக்கூடிய கண்டோர் கூற்றுப்பாடலான ஏழாவது பாடலில் இடம்பெற்ற வருணனை தொடர்பான இருமை எதிர்வு முறையில் இருந்தாலும், அமைப்பு முறையில் சற்று வேறுபட்டு அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மேற்கண்ட 7வது பாடலில் தலைவன் மற்றும் தலைவியைக் குறிக்கும் அன்மொழித்தொகைகள் (வில்லோன், தொடியோள்) முதலில் வந்த

பிறகுதான் அவர்களுடைய கழல் மற்றும் சிலம்பு ஆகியவை இடம்பெறுகின்றன. ஆனால், இல்லத்தில் நிகழக்கூடிய பாடல்களில் இறுதியில் தான் அவர்களைக் குறிக்கும் பெயர்கள் இடம்பெறுகின்றன.

எடுத்துக்காட்டு

...... ஆய்கழற்

சேயிலை வெள்வேல் விடலையொடு

தொகுவளை முன்கை மடந்தை நட்பே (குறு.15)

அழகிய வீரக்கழலையும் செம்மையாகிய இலையையுடைய வெள்ளிய வேலையும் கொண்ட விடலையோடு, பலவாகத்தொக்க வளைகளைப்பூண்ட முன் கைகளையுடைய மடந்தை செய்த நட்பானது என்பது இவ்வரிகளின் பொருளாகும்.

இப்பாடலில் ஆய்கழற் சேயிலை வெள்வேள் விடலை X தொகுவளை முன்கை மடந்தை என்ற அமைப்பு முறையில் ஆய்கழல், வெள்வேல் X தொகுவளை, விடலை X மடந்தை என்று இருமை எதிர்வுகள் அமைந்துள்ளன. இதிலும், தலைவனுக்கு வீரத்தோடு தொடர்புடைய கழலும் மற்றும் வேலும், தலைவிக்கு அணிகலன்களோடு தொடர்புடைய தொகுவளையும் எதிர் எதிர் நிலையில் வைத்து வருணிக்கப்படுகின்றன.

356வது பாடலில் கழலோன் X கோலமை குறுந்தொடி தளிரன்னோள் என்ற அமைப்பு முறையில் கழல் X குறுந்தொடி (வளை), கழலோன் X தளிரன்னோள் என்று இருமை எதிர்வுகள் அமைந்துள்ளன. இதில் தலைவனுக்கு வீரத்தோடு தொடர்புடைய கழலும், தலைவிக்கு அணிகலன்களோடு தொடர்புடைய குறுந்தொடியும் (வளை) எதிர் எதிர் நிலையில் வைத்து வருணிக்கப்படுகின்றன. மேலும், தலைவன், தலைவியைக் குறிக்கும் பெயர்களும், வன்மையினை அடிப்படையாகக் கொண்டு கழலோன் என்றும், தலைவிக்கு மென்மையினை அடிப்படையாகக் கொண்டு தளிரன்னோள் என்று இருமையாக அமைக்கப்பட்டுள்ளது.

378வது பாடலில் சுடர்வாய் நெடுவேற் காளை X மடமா வரிவை என்ற அமைப்பு முறையில் இருமை எதிர்வு அமைந்துள்ளன. ஒளி பொருந்திய நெடிய வேலையுடைய தலைவனோடு, மடப்பத்தையும் மாமையையும் உடைய தலைவி என்பது அவ்வரிகளின் பொருளாகும். இதில் சுடர்வாய் நெடுவேல் X மடமா என்றும், காளை X அரிவை என்று இருமையானது அமைக்கப்படுள்ளன. இதில் தலைவனுக்கு ஆயுதமும், தலைவிக்கு குணமும், நிறமும் இருமைகளாக எதிர் எதிர் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இதில் இல்லத்தில் நிகழக்கூடிய பாடல்களில் தலைவன் தலைவியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட இருமைகளில் 15, 378 ஆகிய பாடல்களில் இடம்பெறும் இருமைகள் அவர்களின் பருவங்களை உணர்த்தும் பெயர்களாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### தலைவியின் நிலையினைச் சுட்டும் இருமைகள்

உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்களில் இடம்பெறும் தலைவியின் நிலைகள் குறித்த இருமைகளானது உடன்போக்கு செல்வதற்கு முன்பு அவளுடைய நிலையையும், சென்றபிறகு பாலையில் அவளுடைய நிலையையும் ஒப்பிட்டு கூறும்படியாக அமைக்கப்பட்டுள்ளன.

தலைவியின் நிலையினைச் சுட்டும் இருமைகள் பாடல்களில் இடம்பெறும் வருகை முறைகளின் அடிப்படையில் இரண்டு விதமாக உள்ளன. அதாவது தலைவியின் நிலையினைச் சுட்டும் இருமைகள் தலைவியின் முந்தைய நிலை X தலைவியின் பிந்தைய நிலை (144, 396) என்ற அமைப்பிலும், தலைவியின் பிந்தைய நிலை X தலைவியின் முந்தைய நிலை (356) என்ற அமைப்பிலும் இரண்டு விதமாக உள்ளன.

**முந்தைய நிலை X பிந்தைய நிலை**

கழிய காவி குற்றுங் கடல

வெண்டலைப் புணரி யாடியு நன்றே

பிரிவி லாய முரியதொன் றயர

இவ்வழிப் படுதலு மொல்லா ளவ்வழிப்

பரல்பாழ் படுப்பச் சென்றனண் மாதோ

சென்மழை தவழுஞ் சென்னி

விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாடே (குறுந்தொகை 144)

மேற்கண்ட குறுந்தொகை 144வது பாடலுக்கு “கழியினிடத்து மலர்ந்த காவிமலர்களைப் பறித்தும், கடலிலுள்ள வெள்ளிய தலையையுடைய அலையின்கண் விளையாடியும், மிக தன்னொடு என்றும் பிரிவில்லாத ஆயத்தார், தத்தமக்கு உரிய விளையாட்டைப் புரிய, இவ்விடத்துப் பொருந்துதலுக்கும் உடம்படாளாகி, விரைந்து செல்லும் மேகங்கள் தவழ்கின்ற உச்சியையுடைய, குறுக்கிடும் மலைகளையுடைய நாட்டில், அப்பாலைநிலத்தில், பருக்கைக்கற்கள் தன் அடியின் அழகைச் சிதைக்கும் வண்ணம் தலைவி போயினள்” என்று உ.வே.சா. உரை எழுதியுள்ளார் (குறுந்தொகை மூலமும் உரையும் ப.285)

இப்பாடலில் தலைவி தலைவனுடன் சென்றதைக் குறிக்க தலைவியின் நிலைகளானது இருமை எதிர்வு நிலையில் குறிப்பிடப்படுகின்றன. பாடலின் முதல் மூன்று அடிகளில் தலைவியின் உடன்போக்கிற்கு முன் அவளுடைய ஆயத்தாருடன் எவ்வாறு இருந்தாள் என்றும், இறுதி நான்கு அடிகளில் தலைவனுடன் செல்லும் வழியில் அவளுடைய நிலை என்னவாக இருக்கின்றது என்றும் இடம்பெறுகின்றன.

**முந்தைய நிலை**

கழிய காவி குற்றுங் கடல

வெண்டலைப் புணரி யாடியு நன்றே

பிரிவி லாய முரியதொன் றயர (குறுந்தொகை 144)

“கழியினிடத்து மலர்ந்த காவிமலர்களைப் பறித்தும், கடலிலுள்ள வெள்ளிய தலையையுடைய அலையின்கண் விளையாடியும், மிக தன்னோடு பிரிதலில்லாத ஆயத்தார், தத்தமக்கு உரிய விளையாட்டைப் புரிய” என்று இப்பாடல் வரிகள் தலைவியின் உடன்போக்கிற்கு முந்தைய நிலையைப் சுட்டுகின்றன.

**பிந்தைய நிலை**

இவ்வழிப் படுதலு மொல்லா ளெவ்வழிப்

பரல்பாழ் படுப்பச் சென்றனண் மாதோ

சென்மழை தவழுஞ் சென்னி

விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாடே (குறுந்தொகை 144)

“இவ்விடத்துப் பொருந்துதலுக்கும் உடம்படாளாகி, விரைந்து செல்லும் மேகங்கள் தவழ்கின்ற உச்சியையுடைய, குறுக்கிடும் மலைகளையுடைய நாட்டில், அப்பாலைநிலத்தில், பருக்கைக்கற்கள் தன் அடியின் அழகைச் சிதைக்கும் வண்ணம் தலைவி போயினள்” என்று இப்பாடல் வரிகள் தலைவியின் உடன்போக்கிற்கு பிந்தைய நிலையைப் சுட்டுகின்றன.

மேற்கண்ட பாடலில் தலைவியின் முந்தைய நிலையும், உடன்போக்குச் சென்ற பிறகு அவளின் நிலையும் இருமை எதிர்வு நிலையில் பேசப்பட்டது போலவே, குறுந்தொகை 396வது பாடலிலும் முதல் இரண்டு அடிகள் தலைவியின் முந்தைய நிலையினையும், மூன்றிலிருந்து ஏழாம் அடிவரை அதாவது இறுதி அடிவரை தலைவியின் பிந்தைய நிலையும் இடம்பெறுகின்றது.

**முந்தைய நிலை**

பாலையும் உண்ணாளாகி, பந்தையும் விரும்பாளாகி, முன்னர்த் தன்னோடு விளையாடும் மகளிர் கூட்டத்தோடு விளையாடிய தலைவி என்று தலைவி உடன்போக்கிற்கு முந்தைய நிலை சுட்டப்படுகின்றது.

**பிந்தைய நிலை**

உலர்ந்த கிளைகளையுடைய ஓமைமரத்தினைக் குத்திய, உயர்ந்த கொம்பையுடைய மலையினிடத்துள்ள வெம்மையாகிய அடிவாரத்தில், மேகம் முழங்குகின்ற கடிய முழக்கத்தைக் கூர்ந்து கேட்கும், மூங்கில்கள் உலர்ந்த செல்லுதற்கரிய இடத்திலே, அத்தலைவனோடு செல்லுதல், எளிமையையுடைய தென்று அறிந்தாளோ? என்று தலைவியின் பிந்தைய நிலையும் சுட்டப்படுகின்றன.

**பிந்தைய நிலை X முந்தைய நிலை**

நிழலான் றவிந்த நீரி லாரிடைக்

கழலோன் காப்பக் கடுகுபு போகி

அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த

வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய

யாங்குவல் லுநள்கொ றானே யேந்திய

செம்பொற் புனைகலந் தம்பொரிக் கலந்த

பாலும் பலவென வுண்ணாள்

கோலமை குறுந்தொடித் தளிரன் னோளே (குறு.356)

என்ற மேற்கண்ட பாடலுக்கு “கையிலேந்திய செம்பொன்னாலாகிய புனைந்த பாத்திரத்தில் உள்ள, அழகிய பொரியோடு கலந்த பாலையும் மிக்கன என்று கூறி, உண்ணாளாகிய

திரட்சியமைந்தகுறிய வளையையணிந்த, தளிரை ஒத்தமென்மையையுடைய என்மகள், நிழல் அடங்கி அற்றுப் போன, நீர் இல்லாத கடத்தற்கரிய பாலை நிலத்தினிடத்தே, வீரக்கழலையுடைய தலைவன் தன்னைப் பாதுகாப்ப, விரைந்து சென்று, நீர்வளமற்ற சுனையின் பக்கத்தில், உலர்ந்து வெம்மையைக் கொண்ட, மிக்க வெப்பத்தையுடைய கலங்கல் நீரை, தவ்வென்னும் ஓசைபட, குடிக்க எவ்வாறு வலியளானாள்?" என்று உ.வே.சா. உரை எழுதியுள்ளார் (குறுந்தொகை மூலமும் உரையும் ப.644)

**பிந்தைய நிலை**

நிழல் அடங்கி அற்றுப் போன, நீர் இல்லாத கடத்தற்கரிய பாலை நிலத்தினிடத்தே, வீரக்கழலையுடைய தலைவன் தன்னைப் பாதுகாப்ப, விரைந்து சென்று, நீர்வளமற்ற சுனையின் பக்கத்தில், உலர்ந்து வெம்மையைக் கொண்ட, மிக்க வெப்பத்தையுடைய கலங்கல் நீரை, தவ்வென்னும் ஓசைபட, குடிக்க எவ்வாறு வலியளானாள்? என்று உடன்போக்கு சென்ற பிறகான தலைவியின் நிலை சுட்டப்படுகின்றது.

**முந்தைய நிலை**

கையிலேந்திய செம்பொன்னாலாகிய புனைந்த பாத்திரத்தில் உள்ள, அழகிய பொரியோடு கலந்த பாலையும் மிக்கன என்று கூறி, உண்ணாளாகிய திரட்சியமைந்தகுறிய வளையையணிந்த, தளிரை ஒத்தமென்மையையுடைய என்மகள் என்று உடன்போக்கு செலவதற்கு முன்பு தலைவியின் நிலையானது விளக்கப்படுகின்றது.

மேற்கண்ட மூன்று பாடல்களையும் இரண்டு புலவர்கள் பாடியுள்ளனர். அதிலும் இதில் இரண்டு (356, 396) பாடல்களைப் பாடிய கயமனார் **முந்தைய நிலை X பிந்தைய நிலை**, **பிந்தைய நிலை X முந்தைய நிலை**என்ற இரண்டு அமைப்பு முறைகளையும் பயன்படுத்தியுள்ளார். குறிப்பாக நிலைகளைக் குறிக்க இரண்டு பாடல்களிலும் இவர் எடுத்துக் கொண்ட பொருள்தளங்கள் ஒன்று போலவே அமைகின்றன.

**உடன்போக்கு பாடல்களும் இருமை எதிர்வும்**

குறுந்தொகையில் காணப்படும் உடன்போக்குத் தொடர்பான பத்தொன்பது பாடல்களை ஆராய்ந்ததில் ஒன்பது பாடல்கள் இருமை எதிர்வு என்ற அமைப்பு முறையில் அமைக்கப்பட்டுள்ளதைக் கண்டறிய முடிந்தது. அவை, 7, 15, 144, 217, 229, 356, 378, 383, 396, ஆகிய பாடல்கள் ஆகும்.

இந்த ஒன்பது பாடல்களில் ஆசிரியன் கோடங்கொற்றன் (144) ஔவையார் (15), பெரும்பதுமனார் (7), தங்கால் முடக்கொல்லனார் (217), படுமரத்து மோசிகீரனார் (383), மோதாசனார் (229) ஆகியோர் ஒரு பாடலும், கயமனார் (356, 378, 396) மூன்று பாடல்களும் பாடியுள்ளனர். இப்பகுதியில் கயமனார் பாடிய மூன்று பாடல்களிலும் இம்முறையைக் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பாடல்கள் அனைத்தும் உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான (217, 383) மற்றும் நிகழ்ந்த பிறகான (7, 15, 144, 229, 356, 378, 396) பொருண்மையைக் களங்களாகக் கொண்ட பாடல்களாக இருப்பினும், உடன்போக்கு நிகழ்ந்தப் பிறகான களங்களைக் கொண்ட பாடல்களில் தான் அதிகமான அமைந்துள்ளன.

இந்த ஒன்பது பாடல்களிலும் 10 இடங்களில் காணப்படும் இருமை எதிர்வுகளை நான்கு விதமாகப் பகுத்து அடையாளம் காண முடியும். அவை,

1. வன்மை X மென்மை (7, 15, 356, 378)
2. உடன்படல் X உடன்படாமை (383)
3. பாதுகாப்பு X அச்சம் (217)
4. அன்று X இன்று (144, 229, 356, 396)

இவற்றின் மூலம் உடன்போக்கு பாடல்களில் நான்கு விதமான இருமை எதிர்வு அமைப்புகள் ஒன்பது பாடல்களில் இடம்பெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது.

வன்மை X மென்மை என்பது தலைவன் மற்றும் தலைவியைப் புலவர்கள் வருணிக்க கையாண்ட முறையினைச் குறிக்கிறது. அதாவது, தலைவனை வலிமையானவனாகவும், ஆயுதங்களுடனும், தலைவியை மென்மையானவளாகவும், அணிகலங்களுடனும் வருணிக்கும் முறையிலான அமைப்பினைப் புலவர்கள் கையாண்டுள்ளனர்.

உடன்போக்கு தொடர்பான பாடல்களில் வன்மை X மென்மை என்ற அடிப்படையில் அமையும் இருமை எதிர்வுகள் நான்கு பாடல்களில் அமைகின்றன. அவை 7, 15, 356, 378 ஆகிய பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் வெவ்வேறு கூற்றுகளாக அமைந்து இருப்பினும், இப்பாடல்களைப் பாடிய புலவர்கள் வெவ்வேறாக இருப்பினும் ஒரே முறையிலான அமைப்பினை இப்புலவர்கள் கையாண்டுள்ளனர் என்பது வரையறுக்கப்பட்ட சங்க கவிதைகளின் கட்டமைப்பினை நமக்கு உணர்த்துகின்றது.

இதில் குறிப்பிட்டுள்ள நான்கு பாடல்களும் உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்கள் என்னும் உள்ளடக்கத்தில் அடங்கும். குறிப்பாக 7வது பாடல் பாலையில் நிகழக்கூடிய பாடல் என்ற உள் உள்ளடக்கத்தில் கண்டோர் கூற்றாகவும், 15, 356, 378வது பாடல்கள் இல்லத்தில் நிகழக்கூடிய பாடல்கள் என்ற உள் உள்ளடக்கத்தில் <u>செவிலிக்கூற்றாகவும்</u> அமைக்கின்றன.

அன்று X இன்று என்பவை அகமாந்தர்களின் சூழ்நிலைகளாவும் அமைந்துள்ளன. உடன்போக்கு தொடர்பான பாடல்களில் அன்று X இன்று என கால அடிப்படையில் இடம்பெறும் இருமைகள் 144, 229, 356, 396 ஆகிய நான்கு பாடல்களில் இடம்பெறுகின்றன. இந்த நான்கு பாடல்களும் உடன்போக்கு நிகழ்ந்த பிறகான உள்ளடக்கத்தில் அமைந்த பாடல்களாகும். அதிலும் 144, 356, 396வது பாடல்கள் உடன்போக்கு நிகழ்ந்த பிறகு இல்லத்தில் நடக்கக்கூடிய <u>செவிலிக்கூற்று</u> பாடலாகவும் 229வது பாடல் பாலையில் நடக்கக்கூடிய கண்டோர் கூற்றுப் பாடலாகவும் அமைந்துள்ளன.

இப்பகுதியில் இடம்பெறக்கூடிய இருமைகள் இரண்டு விதமாக அமைகின்றன. இல்லத்தில் நிகழக்கூடிய மூன்று பாடல்களும் தலைவியின் நிலைகளை விளக்கும் இருமைகளகவும், பாலையில் <u>நிகழ்க்கூடிய</u> பாடல்கள் தலைவன் தலைவியின் உறவுநிலையினை விளக்கும் இருமைகளகவும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு X அச்சம் என்பது பகல் காலம் தலைவனோடு சந்திப்பதற்குப் பாதுகாப்பானது என்றும், இரவு காலம் என்பது பாதுகாப்பானது இல்லை என்பதைக் குறிக்கும் விதமாகவும், உடன்படல் X உடன்படாமை என்பது உடன்போக்கிற்கு முதலில் உடன்பட தலைவி பிறகு உடன்பாடாமையக் குறிக்கும் விதமாகவும் இருமைகள் வந்துள்ளன.

உடன்படல் X உடன்படாமை, பாதுகாப்பு X அச்சம் ஆகியவை தலைவியின் நிலைபாடுகளாகும். இதில் உடன்படல் X உடன்படாமை என்ற பகுப்பை அன்று X இன்று என்ற பகுப்பில் கொண்டு வர முடிந்தாலும், அப்பாடல் தலைவியின் நிலைப்பாட்டைக் குறிப்பதாலும், மற்றப் பாடல்கள் அக மாந்தர்களின் சூழ்நிலைகளாக அமைந்துள்ளதாலும் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று பாதுகாப்பு X அச்சம் தலைவியின் நிலைபாடாக அமைந்தாலும், சற்று வேறுபட்டு அமைந்துள்ளதால் அப்பகுதியும் தனியாகக் குறிக்கப்பட்டுள்ளன.

மொழியியல் அறிஞர் சசூர் வேறுபடுத்துதல் மூலமே மொழியில் அர்த்தம் பிறக்கிறது என்கிறார். அதாவது “மொழி பல அலகுகளால் ஆனது. இந்த அலகுகள் மற்றொரு அலகுடன் கொள்கிற உறவின் மூலமாகத்தான் மொழிக்கு அர்த்தம் வந்து வாய்க்கிறது. இந்த உறவு பெரும்பாலும் ‘வேறுபடுத்துதல்’ என்கிற செயல்பாட்டில் மூலம் அமைகிறது. கண் என்ற ஒலிவடிவம், மண் என்ற ஒலிவடிவத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக் காணும் போதுதான் இரண்டுமே அர்த்தம் பெறுகின்றன” (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் ப.167).

உதாரணமாக, அன்று X இன்று பகுதியில் இடம்பெறும் தலைவியின் நிலைகளை எடுத்துக்கொண்டால் அப்பாடல்கள் அனைத்தும் செவிலிக்கூற்றில் அமைந்த பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் அனைத்தும் தலைவியின் தற்போதைய மன நிலையின் உறுதியை உணர்த்த அவளின் முந்தைய காலத்தின் செழிப்பான நிலையினைச் சுட்டும் போக்கு காணப்படுகின்றது. இந்த வேறுபடுத்தல் மூலமே தலைவியின் மனநிலையை முழுமையாக அறிந்துகொள்ள முடிகின்றது. என்னதான் தான் இருக்குமிடம் செழுமையான, மகிழ்ச்சியளிக்கக் கூடிய பகுதியாக இருந்தாலும், தலைவனுக்காக அதனைத் துறந்து வறட்சி மிகுந்த பகுதிக்குத் தலைவனுடன் செல்லத் துணிந்த செயலினை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு இந்த இருமைகள் பயன்படுகின்றன. வன்மை X மென்மை எடுத்துக்கொண்டாலும் அப்பகுதியில் தலைவன் வீரம் மிக்கவனாகவும், தலைவி மென்மையானவளாகவும் காட்டப்படுகின்றனர். இந்த வேறுபாட்டால் தலைவனால் அவர்கள் செல்லும் நிலத்தின் கடுமையினைத் தாங்கிக் கொள்ளமுடியும் என்றும், தலைவியினால் இயலாது என்ற கருத்தையும், இருப்பினும் தலைவனுடன் சென்ற மனநிலையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது. இதுபோலவே, உடன்படல் X உடன்படாமை, பாதுகாப்பு X அச்சம் ஆகிய இருமைகளும் அமைந்துள்ளன.

**முடிவுரை**

குறுந்தொகையில் இடம்பெறும் உடன்போக்குத் தொடர்பான 19 பாடல்களைக் கூற்று நிகழும் காலம் மற்றும் இடத்தின் அடிப்படையில் உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்கள், உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்கள் என்று இரண்டு வகையான உள்ளடக்கங்களாகப் பகுத்து கூற்று அடிப்படையில் இருமை எதிர்வுகளை ஆராய்ந்ததில் தோழி, செவிலி, கண்டோர் ஆகியோர் தொடர்புடைய ஒன்பது பாடல்களில் இருமை எதிர்வு அமைப்புகள் இடம்பெற்றுள்ளன என்பது கண்டறியப்பட்டது. பிறகு, அவ்விருமைகளை இறுதியில் பகுத்து ஆராய்ந்ததில் அவையனைத்தும் **வன்மை X மென்மை, உடன்படல் X உடன்படாமை, பாதுகாப்பு X அச்சம், அன்று X இன்று என்ற** நான்கு விதமான இருமை எதிர்வுகளாகப் பாடல்களில் அமைந்துள்ளன என்பதும் கண்டறியப்பட்டது. இதில் **உடன்படல் X உடன்படாமை, பாதுகாப்பு X அச்சம்**ஆகிய இருமைகள் உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்களிலும்,

**வன்மை X மென்மை, அன்று X இன்று ஆகிய இருமைகள்**உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்களிலும் வந்துள்ளன.

உடன்போக்கு நிகழ்வதற்கு முன்பான பாடல்களில் இடம்பெறும் இருமைகள் உடன்போக்கு செல்வதற்குத் தூண்டுதல், உணர்த்துதல் என்பனவற்றைக் குறிப்பதற்கும், உடன்போக்கு நிகழ்ந்த பிறகான பாடல்களில் இடம்பெறும் இருமைகள் பெரும்பாலும், உடன்போக்குச் சென்றவர்களின் நிலையினைச் சுட்டும் படியாகவும் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தலைவியின் நிலையினைச் சுட்டும் படியாக அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, குறுந்தொகையில் இடம்பெறும் உடன்போக்குத் தொடர்பான பாடல்கள் மேற்கண்ட இருமை எதிர்வு அமைப்பு முறைகளிலையே சங்க புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்று கண்டறிய முடிகின்றது.

## துணைநூல் பட்டியல்


க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, Cre – A, சென்னை: 2020.

குளோறியா சுந்தரமதி.இலா., பகுப்பாய்வு நெறியில் சங்க இலக்கியம், உலகத் தமிழ்க் கல்வி இயக்ககம், சென்னை:1987

கோவிந்தராச முதலியார்.கா.ரா., நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் பழைய உரையுடன், கழக வெளியீடு, சென்னை:1998

சண்முகம்பிள்ளை.மு., குறுந்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்:1985.

சாமிநாதையர்.உ.வே., குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை:2020.

தமிழவன், அமைப்பியலும் அதன் பிறகும். அடையாளம் பதிப்பகம், திருச்சி:2019.

தமிழவன், பழந்தமிழில் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை: 2009

நடராசன்.தி.சு., திறனாய்வுக் கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை:2016.

பக்தவச்சல ரெட்டி, என். (பொதுப்பதிப்பாசிரியர்), நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள், தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம், 2003.

பஞ்சாங்கம்.க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம்-அகரம் வெளியீடு, தஞ்சாவூர்:2016.

பாலசுந்தரம்.ச., தொல்காப்பியம் பொருளதிகாரம் ஆராய்ச்சி காண்டிகையுரை (தொகுதி-3, பகுதி-1), பெரியார் பல்கலைக்கழகம், சேலம்:2012.

பாலசுந்தரம்.ச., தொல்காப்பியம் பொருளதிகாரம் ஆராய்ச்சி காண்டிகையுரை (தொகுதி-3, பகுதி-2), பெரியார் பல்கலைக்கழகம், சேலம்:2012.

ராஜா.மு., உள்ளடக்கவியல் நோக்கில் குறுந்தொகை உடன்போக்குப் பாடல்கள், நவீனத் தமிழாய்வு (தொகுதி – 13, எண்.4), இராஜா பப்ளிகேஷன்ஸ் திருச்சிராப்பள்ளி: 2025

விஷ்ணுகுமாரன், புறநானூற்றுப் பாடல்களில் இருமை – எதிர்வு அமைப்பு, நவீன இலக்கியக் கோட்பாட்டு நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள், தமிழ்த்துறை, சிக்கய நாயக்கர் கல்லூரி, ஈரோடு: 2014.

TAMILVU.ORG